12.12.2024

O.S.No.44/2013

வா.சா.3.திருமதி.சபியா த.பெ. வீரணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு** விசாரணை

தாவா சொத்து ஆதியில் எனது தாத்தா லெட்சுமணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தின் பழைய சர்வே எண் 47/6, ரீசர்வே எண் 47/4 ஆகும் அதன் விஸ்தீரணம் 48 சென்ட் ஆகும். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 5 பிரதிவாதிகள் யார் என்றால் எங்கள் நிலத்தை தவறாக பதிவு செய்த நபர்கள் அவர்கள் எனது உறவினர் அல்ல. தாவா சொத்து எங்களது அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் எங்களது சொத்தை தவறாக பதிவு செய்து கொண்டார்கள் என்று சொல்வது தவறான சங்கதி என்றால் சரியல்ல. சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் சொத்தை பொறுத்து வருவாய் ஆவணங்களை சரியாக பார்த்து தான் பதிவு செய்யப்படும் என்றாலும் தாவா சொத்தை பொறுத்து முறைகேடாக ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் கூறுவது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எங்களுக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகள் இடையே உள்ள பிரச்சனையில் 6 முதல் 8 பிரதிவாதிகளை சேர்த்து நான் வீண் அலக்கலிப்பு செய்கிறேன் என்றால் சரியல்ல. ஆகையால் 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.